# மூதுரை



# மூதுரை

- முதுமை + உரை = மூதுரை.
- மூத்தோர் கூறும் அறிவுரை.
- 31 பாடல்கள் உள்ளன.
- ஆசிரியர் : ஔவையார்
- கொன்றை வேந்தன், ஆத்திச்சூடி, நல்வழி போன்ற நூல்களை எழுதியவர்.

# மூதுரை

*அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்*
*கடக்கக் கருதவும் வேண்டா-மடைத் தலையில்*
*ஓடுமீன் ஓட உறுமீன் வரும் அளவும்*
*வாடி இருக்குமாம் கொக்கு.*

# உறுமீனுக்காக காத்திருக்கும் கொக்கு



# பொருள்

- நீர் பாயும் தலை மடையில் பல சிறு மீன்கள் ஓடிக் கொண்டிருந்தாலும், கொக்கு வாடியிருப்பதைப் போலக் காத்துக்கொண்டிருக்கும். எது வரை? தனக்குரிய பெரிய மீன் வரும் வரை. அதைப் போலவே அறிஞர்களின் அடக்கமும். அதைக் கண்டு அவர்களை அலக்ஷ்யம் செய்து வென்று விட நினைக்கக்கூடாது.